(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 10.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 செப்டெம்பர் 06 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ சனத் நிசாந்த

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ எஸ். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா**

**கௌரவ வசந்த யாப்பாபண்டார**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ அலி சப்ரி ரஹீம்**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ**

**கௌரவ எம். ராமேஷ்வரன்**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ டீ. பி. ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

I

''அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தம்' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

ஒட்டுமொத்த சட்டமூலத்தினதும் ஏற்பாடுகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டவிடத்து உயர் நீதிமன்றம் பின்வருமாறு தீர்பளித்துள்ளது.

சட்டமூலம், அரசியலமைப்பின் 82(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகாது எனவும், அரசியலமைப்பின் 82(5)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினால் வேண்டப்பட்டவாறு விசேட பெரும்பான்மையொன்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் குறிப்பிடுகின்றது.

சட்டமூலத்தின் 2ஆம் வாசகம், அரசியலமைப்பின் 4(ஆ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதன் 3ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதனவான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும், ஆகவே, அரசியலமைப்பின் 82(5) உறுப்புரையின் ஏற்பாடுகளின் மூலம் வேண்டப்பட்டவாறு விசேட பெரும்பான்மையொன்றின் மூலம் மாத்திரம் நிறைவேற்றப்படவேண்டு மென்பதுடன், 83ஆம் உறுப்புரையின் அதிகாரத்தின் கீழ் மக்கள் வாக்கெடுப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும். ஆயினும், 2ஆம் வாசகத்தில் உள்ள 41அ (6) மற்றும் 41ஆ(4) ஆகிய உத்தேச உறுப்புரைகளில் உள்ள எண்ணக்கரு ஏற்பாடுகள் பொருத்தமான முறையில் நீக்கப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டால் மக்கள் வாக்கெடுப்பொன்றுக்கான தேவைப்பாடு இல்லாதொழிந்துவிடும்.

சட்டமூலத்தின் 3 ஆம் வாசகம், அரசியலமைப்பின் 4(ஆ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதன் 3ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதனவான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும், ஆகவே, அரசியலமைப்பின் 82(5) உறுப்புரையின் ஏற்பாடுகளின் மூலம் வேண்டப்பட்டவாறு விசேட பெரும்பான்மையொன்றின் மூலம் மாத்திரம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுடன், 83ஆம் உறுப்புரையின் அதிகாரத்தின் கீழ் மக்கள் வாக்கெடுப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

ஆயினும்,

(அ) 3 ஆம் வாசகத்தின் உத்தேச உறுப்புரை 44(2), உறுப்புரை 44(3)இற்கான காப்பு வாசகம் மற்றும் 45(1), 46(1), 47(3)(அ), 48(3) மற்றும் 50 ஆகிய உறுப்புரைகளில் உள்ள சனாதிபதி பிரதம அமைச்சரின் அறிவுரைக்கிணங்க செயற்படல் வேண்டும் எனும் குறிப்பீடுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக சனாதிபதி பிரதம அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க செயற்படல் வேண்டும் என்பதை பதிலீடு செய்வதனைக்கொண்டு பொருத்தமான முறையில் திருத்தம் செய்யப்படுவதன் மூலம்; மற்றும்

(ஆ) 3 ஆம் வாசகத்தில் உறுப்புரை 47(2)(அ)வின் ஏற்பாடுகள், உத்தேச உறுப்புரை 47(2) இற்குக் கொண்டுவரப்படுவதன் மூலமும்,

மக்கள் வாக்கெடுப்பொன்றிற்கான தேவைப்பாடு இல்லாதொழிந்துவிடும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**II**

''இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2022 செப்டெம்பர் 06 ஆம் திகதி அதாவது இன்றைய தினம் 'சிசிர ஜயக்கொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்)' எனும் சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.''

**III**

"பாராளுமன்றத்தின் 121 ஆவது நிலையியற் கட்டளை மற்றும் 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைவாக அரசாங்க நிதி பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்களும் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை அறியத்தருகின்றேன்:—

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ மயந்த திசாநாயக்க"

**IV**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, 29 அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களை நியமிக்க வேண்டும் எனவும் மற்றும் தெரிவுக்குழுவினால் அவ்வமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களில் 9 பெயர் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களினதும் பெயர்களையும் என்னால் ஆற்றுப்படுத்தப்படுவதோடு, அவற்றை ஹன்சார்ட அறிக்கையில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பதை இச் சபைக்கு அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

1. பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

    i. கௌரவ அநுர திசாநாயக்க

    ii. கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

    iii. கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

    iv. கௌரவ அருந்திக்க பர்னாந்து

    v. கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

2. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

    i. கௌரவ கபீர் ஹஷீம்

    ii. கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

    iii. கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

    iv. கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

    v. கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

3. துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

    i. கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

    ii. கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

iii. கௌரவ கே. காதர் மஸ்தான்

iv. கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

v. கௌரவ ஹேஷா விதானகே

4. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

i. கௌரவ கபீர் ஹஷீம்

ii. கௌரவ திலும் அமுனுகம

iii. கௌரவ கனக ஹேரத்

iv. கௌரவ அஸோக அபேசிங்ஹ

v. கௌரவ லலித் வர்ண குமார

5. வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

i. கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

ii. கௌரவ சாந்த பண்டார

iii. கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

iv. கௌரவ எஸ்.எம். மரிக்கார்

v. கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

6. கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

i. கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

ii. கௌரவ சிவஞானம் சிறீதரன்

iii. கௌரவ உதயகாந்த குணதிலக்க

iv. கௌரவ குலசிங்கம் திலீபன்

v. கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

7. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

i. கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

ii. கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

iii. கௌரவ சிசிர ஜயகொடி

iv. கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

v. கௌரவ அனுப பஸ்குவல்

8. மின்சக்தி மற்றும் வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

i. கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி

ii. கௌரவ துமிந்த திசாநாயக்க

iii. கௌரவ கபீர் ஹஷீம்

iv. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

v. கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

9. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

i. கௌரவ ஜோன் செனவிரத்ன

ii. கௌரவ வடிவேல் சுரேஷ்

iii. கௌரவ டீ. பி. ஹேரத்

iv. கௌரவ வேலு குமார்

v. கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(ii) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 64(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2266/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(iii) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2277/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான அரச அபிவிருத்தி நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கான திருத்தங்கள் தொடர்பில் நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையைக் குழுவின் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளுடன் அக்குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(i) அநுராதபுரம், கொடகே மாவத்தை, இல. 621/11 இல் வதியும் திரு. பீ.எம்.டி.டி. கந்துலவவினது 2022.03.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) அநுராதபுரம், 11 ஆம் கட்டம், இல. 528/19 இல் வதியும் திரு. டி.எம். அருண ரந்தெனிகமவினது 2022.06.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ பி.எஸ். குமாரசிறி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 ஆகஸ்ட் 09 மற்றும் 12 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 10.45 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய 2291/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (இலங்கையில் சிறுவர் மற்றும் தாய்மாரிடையே நிலவும் போஷாக்கின்மை) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 1.01 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஹேஷா விதானகே தலைமைதாங்குவாராக" என கௌரவ ரோஹித அபேகுணவர்தன முன்மொழிய அதனை கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.47 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

"கௌரவ வேலு குமார் தலைமைதாங்குவாராக" என கௌரவ எஸ்.எம். சந்திரசேன முன்மொழிய அதனை கௌரவ யதாமிணீ குணவர்தன வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.39 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

அப்பொழுது, பி.ப. 5.30 மணியாகிவிடவே விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. அதிலிருந்து விவாதம் 2022 செப்டெம்பர் 07 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணிக்கு, இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க, தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2022 செப்டெம்பர் 07 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.